IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS
(As per XXIII case of Criminal procedure)
SESSIONS CASE NO. 23/2016

Deposition of witness for prosecution : PW10
Defense :

Name : குணசேகரன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.09.2022

முதல் விசாரணை

நான் தற்போது செய்யார் தனி மாவட்ட வருவாய் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 2014ம் வருடம் முள்ளண்டிரம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவராக பணி புரிந்து வந்தேன். 2014ம் வருடம் 3ம் மாதத்தில் ஆரணி அரசு மருத்துவமனையில் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். அது சம்மந்தமாக 24.03.2014 அன்று காலை 10.00 மணிக்கு ஆரணி நகர காவல் நிலையத்திற்கு என்னை வரச்சொல்லி இருந்தார்கள். நானும், கிராம உதவியாளர் சுப்பிரமணியும் காவல் நிலையம் சென்றோம். தனசேகர் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் 5 நபர்களை காவல் நிலையத்தில் கைது செய்து வைத்து விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள் அது சம்மந்தமாக என்னை கையெழுத்து போடும்படி சொன்னார்கள். அங்கிருந்த 5 நபர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் தயார் செய்தார். அதில் நானும் சுப்பிரமணியும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது. நான் கையெழுத்து மட்டும் போட்டேன்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை நான் ஆரணி நகர காவல் நிலையத்தில்தான் போட்டேன் என்றால் சரிதான் . ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள ஒரு கையெழுத்து மட்டும் தான் நான் போட்டேன் வேறு கையெழுத்து எதுவும் நான் போடவில்லை.

மறு விசாரணை இல்லை.